DEPOSITION OF WITNESS
CHAPTER ORDER XVIII CODE OF CIVIL PROCEDURE
IN THE COURT OF DISTRICT MUNSIF, AUNDIPATTI
O.S. No. 24 /2024

Deposition of Witness : DW1

| | | | |
|---|---|---|---|
| Name | : வினோத்குமார் | Father's/Husband's Name : | ரங்கராஜ் |
| Village | : பொம்மிநாயக்கன்பட்டி | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : 34 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.02.2026

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் M.E. படித்துள்ளேன். நான் பூனேவில் வேலை பார்த்து வருகிறேன். நான் 2014ம் ஆண்டில் ஆவடி Veltech University–ல் படித்து முடித்தேன். நான் 2012ம் ஆண்டில் B,E. இரண்டாம் ஆண்டு படித்துக்கொண்டு இருந்தேன். வாதி எனது பெரியப்பா மகன் என்றால் சரிதான். இந்த வழக்கில் வாதியின் பவர் ஏஜெண்டான திருவேங்கடசாமி எனது பெரியப்பா என்றால் சரிதான். திருவேங்கடசாமி எனது அப்பாவுடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். வழக்கில் 2ம் பிரதிவாதி எனது அப்பா என்றால் சரிதான். நான் இந்த சாட்சியத்தை எனக்காக மட்டும் தான் கொடுக்கிறேன். 2014ம் ஆண்டில் எனது அப்பா, பெரியப்பா, சித்தப்பா மற்றும் தாத்தாவுடன் சேர்ந்து ஏற்படுத்திக்கொண்ட பாகவிஸ்திபத்திரம் பத்தி எனக்கு எதுவும் தெரியாது. மேற்படி பாகவிஸ்தி ஆவணம் பற்றி எனக்கு 2023ம் ஆண்டில் தான் தெரிய வந்தது. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே பாகவிஸ்தி பத்திரம் பற்றி எனக்கு தெரியவந்தது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் எனது தாத்தா மற்றும் அவரது மகன்கள் அனைவரும் கையொப்பம் செய்து இருக்கிறார்கள் என்றால் சரிதான்.

2) மேற்படி ஆவணம் ஏற்பட்ட காலத்திலேயே எனது அப்பாவிற்கு அதில் உள்ள விபரங்கள் தெரியும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது அப்பா நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தால் அந்த விபரங்கள் தெரியும் என்றால் சரிதான். 2010ம் ஆண்டில் இருந்து நான் பொம்மிநாயக்கன்பட்டியில் இல்லை. விடுமுறைக்கு மட்டும் வருவேன். எனது அப்பா2016ம் ஆண்டில் இருந்து கொண்டநாயக்கன்பட்டியில் குடியிருந்து வருகிறார். எனது பெயரில் எழுதி வைக்கப்பட்டு இருந்த தானசெட்டில் ஆவணம் பற்றி எனக்கு எப்பொழுது தெரிய வந்தது என்றால் 2012ம் ஆண்டிலேயே தெரியும். அந்த

ஆவணம் பற்றி எனது தாத்தா தான் எனக்கு சொன்னார். அந்த ஆவணத்தில் உள்ள சொத்துக்கள் எங்கே இருக்கிறது என்று தெரியுமா என்றால் தெரியும். அந்த நிலத்தை எனது பெரியப்பா தான் தற்போது விவசாயம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல என் பராமரிப்பில் தான் உள்ளது.

3) தற்போது நிலம் தரிசாக தான் உள்ளது. நான் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு அந்த நிலத்தில் சோளம் பயிர் வைத்து இருந்தேன். அதன் பிறது ஏதுவும் செய்யவில்லை. அந்த பயிர்களை நான் தான் பராமரித்தேன் அது பற்றி எனது அப்பாவிற்கு தெரியாது. 2014ம் ஆண்டு ஏற்பட்ட பாகவிஸ்தி பத்திரம் எனது அப்பாவும் சேர்ந்து மோசடியாக ஏற்படுத்தியது. என் உடன் பிறந்தவர் ஒரு தங்கை மட்டும் இருக்கிறார். மேற்படி பாக பத்திரத்தின் அடிப்படையில் கிடைத்த தாவா சொத்து அல்லாத பிற சொத்துக்களை எனது அப்பா தான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நானும் எனது அப்பாவும் இன்று நல்ல பேச்சு வார்த்தையில் தான் உள்ளோம். விடுமுறைக்கு வந்தால் எனது அப்பா வீட்டில் தான் தங்குவேன். அதிகபட்சமாக விடுமுறைக்கு வந்தால் ஒரு வாரம் அங்கு தங்குவேன். எந்த ஆண்டு கடைசியாக ஒரு வாரம் ஊரில் இருந்தேன் என்றால் எல்லா வருடமும் விசேஷங்களுக்கு வருவேன் குறிப்பிட்டு எந்த தேதி என்று சொல்ல இயலாது. தாவா சொத்திற்கு வாதி பெயரில் தான் பட்டா இருக்கிறது என்றால் சரிதான். எனது அப்பா எனக்கு சொத்தம் எழுதி கொடுக்கவில்லை அவர் எந்த சொத்தில் அனுபவம் செய்கிறார் என்பதும் எனக்கு தெரியாது.

4) தாவா சொத்துக்கள் எனது பெரியப்பாவிற்கு பாகமாக கொடுத்தது அதன் பிறகு வாதி பெயரில் தற்போது பட்டா வழுங்கப்பட்டது என்றால் 2023ம் ஆண்டில் தான் எனக்கு தெரியும். மேற்படி பாகவிஸ்தி பத்திரம் பற்றி தெரிந்தவுடன் எனது அப்பாவிடம் அந்த ஆவணம் பற்றி கேட்டேனா என்றால் இல்லை. 2023ம் ஆண்டில் பாகவிஸ்தி ஆவணம் பற்றி எனக்கு யார் சொன்னது என்று கேட்டால் எனது இடத்திற்கு பட்டா வாங்குவதற்காக மனு செய்தபோது விவரம் தெரியவந்தது. எனக்கு ஆவண எழுத்தர் ஒருவர் மூலம் தான் அந்த ஆவணங்கள் பற்றி தெரிய வந்தது. அந்த ஆவண எழுத்தர் பெயர் எனக்கு தெரியாது. தாசில்தாரிடம் மனு கொடுக்க சென்றபோது ஆவண எழுத்தர் என்னிடம் இந்த ஆவணங்கள் இருப்பதாக சொன்னார். 06.03.2023ம் தேதி ஆண்டிபட்டி தாசில்தாரிடம் மனு கொடுக்க சென்றேன். அந்த மனு என்னிடம் தான்

இருக்கிறது. அந்த மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அந்த மனுவை எனது பெயரில் பட்டா வழங்குவதற்கு தான் கொடுத்தேன்.

5) வாதி பெயரில் உள்ள பட்டாவை மாற்றம் செய்யக்கோரி கொடுக்கவில்லை. தாவா சொத்து சம்பந்தமான சார்பதிவாளர் எது என்பது எனக்கு தெரியவில்லை. எனது நிரூபண வாக்குமூலத்தில் 2014ம் ஆண்டு ஏற்பட்ட பாகவிஸ்தி பத்திரத்தை ரத்து செய்ய மனு கொடுத்தாக சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. வழக்கிறஞருக்கு இந்த வழக்கு சம்மந்தமான விபரங்களை நான் தான் சொன்னேன். வழக்கறிஞரிடம் என் பெயரில் இருந்த தான செட்டில்மெண்ட் ஆவணம் மற்றும் 2014 பாகவிஸ்தி பத்திரங்களை கொடுத்தேனா என்றால் சரிதான். நான் பாகவிஸ்தி பத்திரத்தை சார்பதிவாளர் அலுவகலத்தில் நகல் எடுத்து பார்த்தேனா என்றால் ஆவண எழுத்தர் நகல் (XEROX)எடுத்து கொடுத்தார் அதை பார்த்தேன். அந்த ஆவணத்தை பார்த்த பிறகு யார் யாருக்கு எந்த சொத்துக்கள் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை படித்து தெரிந்து கொண்டேன்.

6) அந்த ஆவணத்தில் தாவா சொத்துக்கள் எனது பெரியப்பா பாகத்திற்கு ஒதுக்கப்பட்ட விபரம் தெரிந்து கொண்டேன். அப்போது எனது தாத்தா உயிருடன் இல்லை. அந்த ஆவணம் பற்றி தெரிந்து கொண்ட பிறகும் கூட எனது அப்பாவிடமோ அல்லது பெரியப்பாவிடமோ அதுபற்றி கேட்டேனா என்றால் கேட்கவில்லை. 2014ம் ஆண்டில் பாகவிஸ்தி பத்திரம் எழுதும்போதே அந்த ஆவணம் பற்றி எனக்கு தெரியும் என்பதால் தான் அந்த ஆவணம் பற்றி நான் யாரிடமும் கேட்கவில்லை என்றால் சரிதான். அந்த ஆவணம் பற்றி தெரிந்த பிறகு ரத்து செய்ய சட்டபூர்வமான நடவடிக்கை எடுத்தேனா என்றால் தாசில்தாரிடம் மனு கொடுத்தேன். தாசில்தாரிடம் கொடுத்த மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கிறஞரிடம் கொடுத்துள்ளேன். மேற்படி மனுவை தவிர்த்து நீதிமன்றம் மூலம் நடவடிக்ககை எதுவும் எடுத்தேனா என்றால் அது எனது வழக்கிறஞருக்கு தான் தெரியும். எனக்கு எழுதி கொடுத்த சொத்தின் சர்வே நம்பர் எனக்கு தெரியும் தற்போது நியாபகம் இல்லை.

7) தாவா சர்வே எண்ணில் எனது தாத்தாவிற்கு எவ்வளவு விஸ்தீரணம் பாத்தியப்பட்டு இருந்தது என்றால் சுமார் 8 1/2 ஏக்கர் இருக்கும். தாவா சர்வே எண்ணில் 5 ஏக்கர் 74 செணட் நிலம் இருக்கிறது என்றாலும் அதை எனது அப்பாவிற்கும், பெரியப்பாவிற்கும் சரிபாதியாக எனது தாத்தா எழுதிக்கொடுத்து இருக்கிறார் என்றால்

அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சர்வே எண்ணில் எனது அப்பாவிற்கு ஒதுக்கப்பட்ட பாகத்தில் இன்றுவரை அவர் தான் விவசாயம் செய்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு தானமாக எழுதிக்கொடுத்த சொத்தை தான் எனது அப்பாவிற்கும் பாகவிஸ்தி எழுதிக்கொடுத்து இருக்கிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த 5 ஏக்கர் 74 செண்ட் நிலம் எங்கு இருக்கிறது மற்றும் அதன் நான்குமால் விபரம் எனக்கு தெரியாது. என்னுடைய இடத்திற்கான நான்குமால் விபரம் எனக்கு தெரியும். வடக்கு – ரோடு, தெற்கு – என் தாத்தாவின் நிலம், கிழக்கு – வண்டிப்பாதை, மேற்கு – ஓடை. எனக்கு எழுதிக்கொடுத்த இடம் தாவா சர்வே எண்ணில் கட்டுப்பட்ட 5 ஏக்கர் 74 செண்டு நிலத்திற்குள் அமைந்து இருக்கிறதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

8) தற்போது என் இடத்தை சுற்றி உள்ள நான்குமால் விபரங்கள் எனக்கு தெரியவில்லை. எனக்கு தானமாக கொடுத்த சொத்தையும் சேர்த்து தான் 2014 பாகவிஸ்தியில் எனது அப்பாவின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு நன்கு தெரியும் என்றாலும், காலம் கடந்து தற்போது வாதியுடன் பிரச்சனை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த விபரங்கள் எனது அப்பாவிற்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சொத்துக்கள் சம்மந்தமாக நானும் எனது அப்பாவும் எதுவும் பேசிக்கொள்ள மாட்டோம். 2012ம் ஆண்டில் எனக்கு தானம் எழுதிக்கொடுத்து இருந்தாலும் அந்த சொத்தை மீண்டும் எனது அப்பாவின் பாகத்திற்கு எனது தாத்தாவே எழுதிக்கொடுத்து விட்டதால் எனக்கு எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் ஆவணம் இல்லா நிலையானது என்றால் சரியல்ல. எனக்கு எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் ஆவணம் பெயரளவிற்கு எழுதப்பட்டது என்பதால் தான் வருவாய் ஆவணங்களில் எனது பெயர் மாற்றம் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. எனக்கு எழுதிக்கொடுத்த நிலம் எனது அப்பாவிடம் தான் இருக்கிறது என்பதை நன்கு தெரிந்தும், வாதியிடம் வீண் பிரச்சினை செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. எனது எழுதிக்கொடுத்த ஆவணத்தில் உள்ள கிணற்றில் உள்ள மின்சார மோட்டார் பற்றிய எந்த ஒரு விவபரமும் எனக்கு தெரியாது என்றால் தண்ணீர் இருப்பது மட்டும் தெரியும்.

9) தாவா சொத்தில் வாதி தான் அது வரை விவசாயம் செய்து வருகிறார் என்றாலும், நான் இந்த வழக்கில் தவறாக எதிர்வாதம் செய்த வருகிறேன் என்றால்

சரியல்ல. பாகவிஸ்தி வாதி வகையறாவிற்கு கிடைத்த நிலத்தில் தான் வாதி அனுபவத்தில் இருக்கிறார் என்றாலும், அவருடன் வீண் பிரச்சனை செய்வதற்காக தான் இந்த வழக்கில் எதிர்வாதம் செய்கிறேன் என்றால் சரியல்ல. பாகவிஸ்தியில் கிடைத்த சொத்துக்கள் பொறுத்து பெரியப்பா மற்றும் அப்பா பெயரில் வருவாய் ஆவணங்கள் தாக்கலாகி இருக்கிறது என்றால் சரிதான். தாவா சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றாலும் எனக்கு எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் இல்லா நிலையானது என்று அறிவிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Taken down by me/before me in open court on 26.02.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

E SUGANTHAN

Digitally signed by E SUGANTHAN
Date: 2026.02.26 13:38:42 +0530

District Munsif,
Aundipatti.